செ.வெ.எண்.43 நாள்: 20.10.2021

தமிழக அரசின் சேவைகளை பொது மக்களின் இருப்பிடங்களுக்கே கொண்டு செல்லும் வண்ணமாகவும், விவசாயிகள் மற்றும் வீட்டு உரிமையாளர்களின் பட்டா தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் தூத்துக்குடி மாவட்டத்தில் 22.10.2021, 27.10.2021 மற்றும் 29.10.2021 ஆகிய நாட்களில் முகாம்கள் நடைபெற உள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

தமிழக அரசின் சேவைகளை பொது மக்களின் இருப்பிடங்களுக்கே கொண்டு செல்லும் வண்ணமாகவும், விவசாயிகள் மற்றும் வீட்டு உரிமையாளர்களின் பட்டா தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையிலும், அரசாணை எண் : 644 நாள் 11.10.2021ன் படி, ஒவ்வொரு வருவாய் கிராமங்களிலும் பட்டா தொடர்பான மனுக்கள் பெற்று தீர்வு காண சிறப்பு முகாம்கள் நடத்தி பொங்கல் 2022க்குள்ளாக பொதுமக்களின் குறைகளை முழுமையாக களைந்திட நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில், ஒவ்வொரு புதன்கிழமை மற்றும் வெள்ளிகிழமைகளில் அனைத்து வட்டங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.. பொதுமக்கள் தங்களது நிலங்களுக்கான பட்டா தொடர்பான பிரச்சனைகளான கணினியில் புலஎண்கள் திருத்தம், உட்பிரிவு எண்கள் திருத்தம், பரப்பு திருத்தம், பட்டாதாரர்களின் பெயர்கள் மற்றும் தந்தை/பாதுகாவலர் பெயர்கள் திருத்தம், உறவுமுறை திருத்தம், பட்டாவில் சில குறிப்புகலங்களில் காலியாக விடப்பட்டுள்ளமைக்கான திருத்தங்கள், பிற அருகாமையில் உள்ள பட்டாதாரர்களின் பெயர்கள் தங்களது பட்டாவில் இடம்பெற்றுள்ளமைக்கான திருத்தங்கள் போன்றவற்றுக்காகவும், முதியோர் உதவித் தொகை உள்ளிட்ட சமூக பாதுகாப்புத் திட்டங்கள் குறித்த மனுக்கள், இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் கோரல், ஆக்கிரமிப்பு வரன்முறைப்படுத்துதல், பல்வேறு வகையான சான்றுகள் கோரல், குடிநீர் வசதி, சாலை வசதி கோரல் போன்ற இனங்கள் தொடர்பாகவும் பொதுமக்கள் மனுக்கள் அளித்து பயன்பெறலாம். தூத்துக்குடி மாவட்டத்தில் 22.10.2021, 27.10.2021 மற்றும் 29.10.2021 ஆகிய நாட்களில் முகாம்கள் நடைபெற உள்ள கிராமங்களின் விபரங்கள் பின்வருமாறு.

| வ. எண் | தேதி | வட்டத்தின் பெயர் | கிராமங்களின் எண்ணிக்கை | கிராமங்களின் பெயர்கள் |
|---|---|---|---|---|
| 1 | | தூத்துக்குடி | 2 | முள்ளக்காடு - பகுதி 1,<br>மேல தட்டப்பாறை. |
| 2 | | ஸ்ரீவைகுண்டம் | 2 | கலியாவூர்,<br>உழக்குடி. |
| 3 | | திருச்செந்தூர் | 2 | பரமன்குறிச்சி,<br>குதிரைமொழி. |
| 4 | | சாத்தான்குளம் | 2 | மீரான்குளம் - பகுதி 1,<br>மீரான்குளம் - பகுதி 2. |
| 5 | | ஏரல் | 2 | ஆறுமுகமங்கலம்,<br>சிறுதொண்டநல்லூர். |
| 6 | 22.10.2021<br>வெள்ளி | ஓட்டப்பிடாரம் | 3 | வாலசமுத்திரம்,<br>சிந்தலக்கட்டை,<br>கே.சண்முகபுரம். |
| 7 | | விளாத்திகுளம் | 4 | முத்துசாமிபுரம்,<br>கவுண்டம்பட்டி,<br>சிவலார்பட்டி,<br>வன்னிபட்டி. |
| 8 | | எட்டையாபுரம் | 3 | படர்ந்தபுளி,<br>பேரிலோவன்பட்டி,<br>நம்பிபுரம். |
| 9 | | கோவில்பட்டி | 2 | ஜமின் தேவர்குளம்,<br>கே.வெங்கடேஸ்வரபுரம். |
| 10 | | கயத்தார் | 3 | தெற்கு கழுகுமலை,<br>கரடிகுளம்,<br>கத்தாளம்பட்டி. |
| மொத்தம் | | | 25 | |

| வ. எண் | தேதி | வட்டத்தின் பெயர் | கிராமங்களின் எண்ணிக்கை | கிராமங்களின் பெயர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 27.10.2021<br>புதன் | தூத்துக்குடி | 2 | கீழத்தட்டப்பாறை,<br>அல்லிகுளம். |
| 2 | | ஸ்ரீவைகுண்டம் | 2 | ஆலந்தா,<br>பூவாணி. |
| 3 | | திருச்செந்தூர் | 2 | செம்மறிக்குளம்,<br>நங்கைமொழி. |
| 4 | | சாத்தான்குளம் | 2 | ஸ்ரீவெங்கடேஸ்வரபுரம்,<br>கருங்கடல். |
| 5 | | ஏரல் | 2 | வாழவல்லான்,<br>திருப்பணி செட்டியாபத்து. |
| 6 | | ஓட்டப்பிடாரம் | 2 | எஸ்.குமாரபுரம்,<br>எப்போதும் வென்றான். |
| 7 | | விளாத்திகுளம் | 4 | மெட்டில்பட்டி,<br>செங்கோட்டை,<br>பட்டிதேவன்பட்டி,<br>குமாரசித்தன்பட்டி. |
| 8 | | எட்டையாபுரம் | 3 | டி.தங்கம்மாள்புரம்,<br>ராமனூத்து,<br>தலைக்காட்டுபுரம். |
| 9 | | கோவில்பட்டி | 2 | கழுகுமலை,<br>வில்லிசேரி - பகுதி 1. |
| 10 | | கயத்தார் | 3 | கே.சுப்பிரமணியபுரம்,<br>காலங்கரைப்பட்டி,<br>எஸ்.குமரெட்டியாபுரம். |
| மொத்தம் | | | 24 | |

| வ. எண் | தேதி | வட்டத்தின் பெயர் | கிராமங்களின் எண்ணிக்கை | கிராமங்களின் பெயர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 29.10.2021 வெள்ளி | தூத்துக்குடி | 2 | மறவன்மடம், செந்திலாம்பண்ணை. |
| 2 | | ஸ்ரீவைகுண்டம் | 2 | சிங்கத்தாகுறிச்சி, வட வல்லநாடு. |
| 3 | | திருச்செந்தூர் | 2 | மெய்ஞானபுரம், மானாடு தண்டபத்து. |
| 4 | | சாத்தான்குளம் | 2 | கட்டாரிமங்களம், பழங்குளம். |
| 5 | | ஏரல் | 2 | கொற்கை, கொடுங்கனி. |
| 6 | | ஓட்டப்பிடாரம் | 2 | ஜெகவீரபாண்டியபுரம், காட்டுநாயக்கன்பட்டி. |
| 7 | | விளாத்திகுளம் | 4 | மணியக்காரன்பட்டி, சென்னம்பட்டி, வௌவால்தொத்தி, சங்கரலிங்கபுரம். |
| 8 | | எட்டையாபுரம் | 3 | சிங்கிலிபட்டி, கழுகுகாசலபுரம், வேலிடுபட்டி. |
| 9 | | கோவில்பட்டி | 2 | வில்லிசேரி - பகுதி 2, இடைசெவல் - பகுதி 1. |
| 10 | | கயத்தார் | 3 | காலம்பட்டி, கட்டாலங்குளம், சரவணாபுரம். |
| **மொத்தம்** | | | **24** | |

எனவே, மேற்படி கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் அனைவரும் இவ்வாய்ப்பை பயன்படுத்தி தமது கோரிக்கைகள் குறித்து மனுக்கள் அளித்து தீர்வு காண கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேற்படி முகாமில் கலந்து கொள்ளும் மக்கள் அனைவரும் கோவிட்-19 தொற்றிலிருந்து தவிர்க்கும் பொருட்டு கோவிட் -19 வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடித்து சமூக இடைவெளியுடன் முகக்கவசம் அணிந்து வரக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இதனை சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்கள் முறையாக கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.